**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S. R.R. SENTHILKUMAR RAJU ROUGH STONE AND GRAVEL QUARRY, SF Nos. 52/8B2, 52/8B3, 53/10, 53/11, 53/12, 53/5B, 53/6, 53/7, 53/8, 53/9, 54/1B2, & 54/1C OF SUNDAKOTTAI VILLAGE, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 10.08.2023, 11.00 A.M M/s. SATHYA MAHAL, M.REDDIAPATTI, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | J. Ravikumar | : | District Revenue Officer/ Additional District Magistrate, Virudhunagar. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar. |
| 3 | D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar. |
| 4 | D. Arivalagan | : | Tahsildar, Aruppukottai Taluk. |

Public, Project proponent 196 Nos (List enclosed)

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of M/s. R.R. Senthilkumar Raju Rough Stone and Gravel Quarry, SF Nos. 52/8B2, 52/8B3, 53/10, 53/11, 53/12, 53/5B, 53/6, 53/7, 53/8, 53/9, 54/1B2, & 54/1C of Sundakottai Village, Aruppukottai Taluk, Virudhunagar District was conducted at M/s. Sathya Mahal, M.Reddiapatti, Aruppukottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the District Revenue Officer/ Additional District Magistrate, Virudhunagar, other

government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The Hindu" on 01.07.2023. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The District Revenue Officer/ Additional District Magistrate, Virudhunagar initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s R.R. Senthilkumar Raju Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

**Thiru.N. Vasudevan, Bommakottai :-**

Thiru. N. Vasudevan stated that the name of revenue village Sundakottai, which is in Bommakottai Panchayat itself is not mentioned in the executive summary of the project. He further stated that the operations of the quarry causes respiratory related issues and also affects

nearby agricultural lands. The school children also get affected due to the heavy vehicle movement and requested to consider the petitions of public in respect of quarry operations.

He further stated that there are five number of quarries are under operation in this village and there is a vibration of houses in villages and water sources are getting affected due to the quarry operations. The saltiness of ground water is being increased and the quarry waste is being dumped in kanmoi. Dust is being emitted from Jayavilas quarry and the public are inhaling the dust and chemical mixed air.

He also stated that the depth of quarry is 60 feet, which is more than ground water table of 45 feet. Hence, ground water will get depleted and public are in the stage to vacate the village. There are 100 people from Bommakottai came here to oppose the project and requested not to issue permission to the quarry.

**Thiru. Madhan Logesh, Bommakottai :-**

Thiru. Madhan Logesh stated that the quarries are using explosives three times a day instead of scheduled times, which causes health issues to the nearby residences. There is a vibration due to blasting operation. He further stated that quarries have established a road in middle of a kanmoi and also stated that original reports with respect to the Bommakottai Village are not coming anywhere.

**Thiru. Pothiraj, M.Reddiyapatti :-**

Thiru. Pothiraj told that the quarries are under operation for more than 30 to 40 years and due to increase in land values, the agricultural activities were stopped. Without quarrying, no other works can be carried out. The persons from other districts were also carrying quarry operations here, and it helps contractors and general public. He told that he has no objections for the project.

In that time, there was a little confusion in the meeting due to his opinion.

**Tmt. Sridevi, Bommakottai :-**

Tmt. Sridevi informed that before 40 years the quarry operations were carried out by hand in this area, but now they are using explosives, which is affecting the water sources. She told no to the quarry project.

**Tmt. Tamilselvi, Bommakottai:-**

Tmt. Tamilselvi told that water sources have got saltiness and agriculture activities also stopped.

**Thiru. Duraipandi, Muthuramalingapuram :-**

Thiru. Duraipandi informed that due to the flying stones from the quarries located in SF No. 46/1, his well located in survey number 47 is getting affected and the schedule time of explosive use is not known correctly.

**Tmt. Vijayalakshmi, Bommakottai :-**

Tmt. Vijayalakshmi informed that there are agricultural lands located near to quarries and they are affected by flying stones. The kanmai water is being affected due to the mixiy of quarry wastes. She requested drinking water needs to be provided to the public and children are getting affected due to the explosive sound. She requested that public should not get affected.

**Thiru. Kannadasan, Muthuramalingapuram :-**

Thiru. Kannadasan informed that Muthuramalingapuram is located within 3 KM distance from the quarry and requested to take decision by comparing both good and bad things happened due to quarry operations.

**Thiru. Ramar, Aladipatti :-**

Thiru. Ramar informed that quarry site is located near to Aladipatti only eventhough the location falls in Bommakottai Panchayat as per records. He informed that he has no objection to the project, if the quarry operates as per government rules and regulations and without affecting environment. The requested local public to be given employment.

**Thiru. Jothimuthu, Aladipatti:-**

Thiru. Jothimuthu told that the lands are being sold to high prices for quarrying purposes. He told that M – Sand and stone are required for building homes and roads and requested to carry out explosive operations without affecting anybody.

**Thiru. Rajeshkumar, Kurunaikulam :-**

Thiru. Rajeshkumar informed that they are carrying out quarrying activity as a family activity and the Green Fund & District Mineral Fund are the main revenue to the Panchayat and roads were established by quarry owners. He requested to take decisions by considering such good things happened due do quarrying activities.

**Thiru. Thiagarajan, Bommakottai:-**

Thiru. Thiagarajan told that general public do not aware about the revenue of panchayat. He told that the quarrying activities were carried out by hand and hence nothing got affected. But now the houses are getting affected due to the use of explosives. The quarry operation needs to be carryout with affecting anything, else other type of actions will be initiated.

**Thiru. Govindharaj, Bommakottai :-**

Thiru. Govindharaj also stated that quarry operations were carried out by hand previously, but now houses are vibrated due to the use of explosives and also affect the water sources. He

further stated that no activities were carried out in panchayat in last two years and even water needs to be bought for drinking itself and requested to find a solution for the same.

After that, since no one came forward to give view on the project, the District Revenue Officer/ Additional District Magistrate, Virudhunagar invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written and 2 numbers of petitions were received in person.

With this, the meeting came to the end.

18.8.2023
District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

18.8.2023
District Revenue Officer /
Additional District Magistrate,
Virudhunagar

Enclosures:

1. Copy of Attendance Register (Total 16 – pages, 196 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், சுண்டக்கோட்டை கிராமம், புல எண்கள் : 52/8B2, 52/8B3, 53/10, 53/11, 53/12, 53/5B, 53/6, 53/7, 53/8, 53/9, 54/1B2 & 54/1C –ல் திரு. ஆர்.ஆர். செந்தில்குமார் ராஜு உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 10.08.2023 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், எம்.ரெட்டியாபட்டி கிராமம், கதவு எண்: 1/117A ல் உள்ள திரு. சத்யா மஹாலில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. ஜெ. ரவிகுமார் | : | மாவட்ட வருவாய் அலுவலர்/<br>கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்<br>விருதுநகர். |
| 2 | திரு. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | திரு. து.மு. கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 4 | திரு. D. அறிவழகன் | : | வட்டாசியர்,<br>அருப்புக்கோட்டை வட்டம்,<br>விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 196 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், சுண்டக்கோட்டை கிராமம், புல எண்கள் : 52/8B2, 52/8B3, 53/10, 53/11, 53/12, 53/5B, 53/6, 53/7, 53/8, 53/9, 54/1B2 & 54/1C –ல் திரு. ஆர்.ஆர். செந்தில்குமார் ராஜு உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல்

அனுமதி வழங்குவதற்காக, அப்பகுதி பொது மக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், எம்.ரெட்டியாபட்டி கிராமம், கதவு எண்: 1/117A ல் உள்ள தி/ள். சத்யா மஹாலில் 10.08.2023 அன்று முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி ஹிந்து" நாளிதழ்களில் 01.07.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், விருதுநகர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு,

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/ள். ஆர்.ஆர். செந்தில்குமார் ராஜு உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

<u>திரு.என். வாசுதேவன், பொம்மக்கோட்டை</u>

திரு.வாசுதேவன் அவர்கள் பேசுகையில், இந்த திட்ட அறிக்கையில் பொம்மக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட சுண்டக்கோட்டை வருவாய் கிராமத்தின் பெயரே இடம்பெறவில்லை எனக் கூறினார். மேலும், குவாரி செயல்பாட்டால் மூச்சுத்திணறல் ஏற்படுவதாகவும், குவாரிக்கு அருகில் விவசாய நிலங்கள் உள்ளதாகவும் கூறினார். குவாரி செயல்பாட்டால் உருவாகும் கனரக வாகன போக்குவரத்தால் பள்ளி மாணவ, மாணவிகள் பாதிப்படைவதாகவும், குவாரி செயல்பாடுகள் குறித்த பொதுமக்களின் கோரிக்கைகளை பரிசீலிக்க வேண்டும் எனவும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், இந்த ஒரு கிராமத்தில் மட்டும் ஐந்து குவாரிகள் இயங்குவதாகவும், அவற்றின் செயல்பாட்டால் கிராமம் பாதிப்படைவதாகவும், கிராமத்தில் வீடுகள் அதிர்வடைவதாகவும், நீராதரங்கள் பாதிப்படைகின்றன எனவும் கூறினார். மேலும், நிலத்தடி நீரில் உப்புத்தன்மை அதிகரிப்பதாகவும், குவாரி செயல்பாட்டில் உருவாகும் தூசி மற்றும் கழிவுகளை கண்மாயில் கொட்டுவதாகவும் தெரிவித்தார். இங்குள்ள ஜெயவிலாஸ் குவாரியில் இருந்து தூசி பரவுவதாகவும் கூறினார். இப்பகுதி மக்கள் வெடிமருந்து மற்றும் மண் கலந்த காற்றை

சுவாசிப்பதாகவும் கூறினார்.

குவாரியானது 60 அடி ஆழத்திற்கு இருப்பதாகவும், ஆனால் நிலத்தடிநீர் 45 அடி ஆழத்திலேயே இருப்பதால் நிலத்தடி நீர் பாதிப்படையும் எனவும், பொதுமக்கள் ஊரைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார். விவசாயத்தை பாதுகாக்க வேண்டும் என்றும், பொம்மக்கோட்டை கிராமத்திலிருந்து 100 பேர் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும், குவாரி தொடங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

<u>திரு. மதன்லோகேஸ், பொம்மக்கோட்டை</u>

திரு.மதன்லோகேஸ் அவர்கள், குவாரிகளில் குறித்த நேரத்தில் வெடி போடாமல், காலை, மதியம் மற்றும் மாலை என தினமும் மூன்று முறை வெடி போடுவதாகவும், குவாரி செயல்பாட்டால் அருகில் உள்ளவர்களுக்கு உடல்நல குறைபாடு ஏற்படுவதாகவும் கூறினார். அங்குள்ள கண்மாய்க்கு நடுவில் அனுமதியில்லாமல் பாதை போடப்பட்டுள்ளதாகவும், பொம்மக்கோட்டை கிராமம் தொடர்பான உண்மையான அறிக்கைகள் வருவதில்லை எனவும் கூறினார்.

<u>திரு.போத்திராஜ், எம்.ரெட்டியாபட்டி</u>

திரு.போத்திராஜ் அவர்கள், 30 முதல் 40 வருடங்களாக இப்பகுதியில் குவாரிகள் இயக்கத்தில் இருப்பதாகவும், இப்பகுதியில் நிலத்தின் விலை அதிகரித்துள்ளதால் விவசாயம் நடப்பதில்லை எனவும், குவாரி செயல்படாவிட்டால் வேறு எந்த வேலையும் செய்ய இயலாது எனவும் கூறினார். மற்ற மாவட்டங்களில் இருப்பவர்களும் இப்பகுதியில் வந்து குவாரி தொழில் செய்வதாகவும், காண்டராக்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உதவியாக இருப்பதாகவும், இத்திட்டத்திற்கு தனது ஆட்சேபனை ஏதும் இல்லை எனவும் கூறினார்.

இச்சமயத்தில் இவர் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது.

திருமதி.ஸ்ரீதேவி, பொம்மக்கோட்டை

திருமதி.ஸ்ரீதேவி அவர்கள் இப்பகுதியில் 40 வருடங்களுக்கு முன் உளி மூலமாக குவாரித் தொழில் நடந்தது எனவும், தற்பொழுது குவாரிகளில் வெடி வெடிப்பதால் நீர் ஆதாரங்கள் பாதிப்படைகின்றது எனவும், குவாரி வேண்டாம் எனவும் கூறினார்.

திருமதி.தமிழ்செல்வி, பொம்மக்கோட்டை

திருமதி.தமிழ்செல்வி அவர்கள், தண்ணீர் ஆதாரம் மிகவும் உப்பாகிவிட்டது எனவும், விவசாயம் நின்று விட்டது எனவும் கூறினார்.

திரு.துரைப்பாண்டி, முத்துராமலிங்கபுரம்

திரு.துரைப்பாண்டி அவர்கள், புல எண் : 46/1 ல் செயல்படும் குவாரியில் வெடி வைக்கும் போது பறக்கும் கற்களால், புல எண் : 47 ல் அமைந்துள்ள தன்னுடைய கிணறு பாதிப்படைவதாகவும், குவாரியில் வெடி போடும் நேரம் முறையாக தெரிவதில்லை எனவும் கூறினார்.

திருமதி.விஜயலட்சுமி, பொம்மக்கோட்டை

திருமதி.விஜயலட்சுமி அவர்கள், குவாரிக்கு அருகில் விவசாய நிலம் இருப்பதாகவும், குவாரி செயல்பாட்டால் கல் விழுவதாகவும், குவாரியில் இருந்து வெளியேறும் நீரானது கண்மாய்க்கு வருவதால், கண்மாய் நீர் மாசு அடைந்துள்ளதாகவும் கூறினார். மக்களுக்கு நல்ல நீர் வழங்க வேண்டும் என்றும், வெடி சத்தத்தால் குழந்தைகள் பாதிப்படைகின்றன என்றும் கூறினார். அவர் மேலும் கூறுகையில் பொதுமக்கள் எவ்விதத்திலும் பாதிப்படைய கூடாது என கேட்டுக் கொண்டார்.

திரு.கண்ணதாசன், முத்துராமலிங்கபுரம்

திரு.கண்ணதாசன் அவர்கள், குவாரியானது முத்துராமலிங்கபுரத்தில் இருந்து 3 கி.மீட்டர் தொலைவிலேயே உள்ளதாகவும், குவாரியினால் ஏற்படும் நன்மை மற்றும் தீமைகளை ஆராய்ந்து பார்த்து அதன்பின் தகுந்த முடிவெடுக்க வேண்டும் என

கேட்டுக் கொண்டார்.

திரு.ராமர், ஆலடிப்பட்டி

திரு.ராமர் அவர்கள் பேசுகையில், குவாரி அமையும் இடம் ஆவணங்களின்படி பொம்மக்கோட்டை ஊராட்சி என இருந்தாலும், அது ஆலடிப்பட்டி கிராமத்திற்கு அருகிலேயே அமைகிறது எனக் கூறினார். குவாரியானது அரசாங்க சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் செயல்பட்டால் தங்களுக்கு இத்திட்டத்தில் ஆட்சேபனை ஏதும் இல்லை எனக் கூறினார்.

திரு.ஜோதிமுத்து, ஆலடிப்பட்டி

திரு.ஜோதிமுத்து அவர்கள், குவாரிக்காக நிலத்தை அதிக விலைக்கு விற்பதாக தெரிவித்தார். எம்.சாண்டு மற்றும் கல் ஆகியவை வீடு கட்ட மற்றும் சாலை அமைக்க தேவை எனவும் கூறினார். மேலும், வெடி வெடிப்பதை யாருக்கும் பாதிப்பில்லாமல் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

திரு.ராஜேஸ்குமார், குருணைக்குளம்

திரு.ராஜேஸ்குமார் அவர்கள் தன்னுடைய அப்பா, தாத்தா என பரம்பரையாக குவாரி வேலை செய்வதாகவும், குவாரி செயல்பாட்டில் உருவாகும் பசுமை நிதி ( Green Fund), மாவட்ட கனிம நிதி ( District Mineral Fund) ஆகியவை ஊராட்சிக்கு முக்கியமான வருவாயாக உள்ளதாகவும், குவாரி உரிமையாளரால் இப்பகுதியில் சாலை போடப்பட்டுள்ளதாகவும் கூறினார். குவாரியினால் ஏற்படும் இவ்வகை நன்மைகளை கருத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டும் எனக் கூறினார்.

திரு. தியாகராஜன், பொம்மக்கோட்டை

திரு.தியாகராஜன் அவர்கள் ஊராட்சியின் வருவாய் குறித்து பொதுமக்களுக்கு ஏதும் தெரியாது எனக் கூறினார். மேலும் கூறுகையில், முன்னர் குவாரியானது கையினால் செய்தார்கள். அதனால், எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், தற்பொழுது வெடி வெடிப்பதால் அப்பகுதியில் வீடுகள் பாதிப்படைகின்றன எனக்

கூறினார். பாதிப்பு ஏதும் வராமல் குவாரி செய்ய வேண்டும் எனவும், இல்லையென்றால் வேறுவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கூறினார்.

திரு.கோவிந்தராஜ், பொம்மக்கோட்டை

திரு.கோவிந்தராஜ் அவர்கள் முன்னர் குவாரி தொழிலை கையினால் செய்தார்கள். ஆனால் தற்பொழுது வெடி உபயோகிப்பதால் வீடுகள் அதிர்வடைகின்றன எனவும், நீராதாரம் பாதிப்படைகின்றது எனவும் கூறினார். மேலும், கடந்த இரண்டு வருடங்களாக ஊராட்சியில் எவ்வித வளர்ச்சி பணியும் நடைபெறவில்லை எனவும், குடிநீரை விலை கொடுத்து வாங்கி பயன்படுத்தி வருவதாகவும் கூறினார். அதற்கு தக்க தீர்வு வேண்டும் எனவும் கூறினார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறு யாரும் முன்வராததால், மாவட்ட வருவாய் அலுவலர்/கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப்பூர்வவமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, எழுத்துப்பபூர்வமாக 2 மனுக்கள் பெறப்பட்டன.

அத்துடன் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

18.8.2023
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்

18.8.2023
மாவட்ட வருவாய் அலுவலர் /
கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்,
விருதுநகர்

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 16 பக்கங்கள், 196 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கை செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).